## 'திராவிட மாடல்' அரசு என்றும்

# மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் வெற்றிகளைக் குவிக்க துணை நிற்கும்!

## 44 வீரர்களுக்கு ரூ.2.52 கோடி உயரிய ஊக்கத்தொகை வழங்கி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!







துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.02.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் உள்ள சென்னை ஒலிம்பிக் அகாடமியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 44 மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ. 2.52 கோடிக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் என்.ராமசந்திரன், சர்வதேச பாரா தடகள வீரர் மனோஜ் சிங்கராஜா, தேசிய பாரா டேபிள் டென்னிஸ் வீராங்கனை செல்வி. பேபி சஹானா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**சென்னை,பிப்.28-**

**சென்னையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் பேரில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், பதக்கங்களை வென்ற மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு, உயரிய ஊக்கத்தொகை வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, பல்வேறு தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்று, தமிழ் நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த 44 மாற்றுத் திறனாளி வீரர் - வீராங்கனையருக்கு ரூ.2.52 கோடி மதிப்பில் உயரிய ஊக்கத்தொகையை வழங்கினார்.**

**அப்போது அவர், `மாற்றுத்திறனாளி வீரர்கள் விளையாட்டுத் துறையில், இன்னும் பல வெற்றிகளைக் குவிக்க நம் திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும்' என வாழ்த்துரை வழங்கினார்.**

**துணை முதல்வர் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

தேசிய அளவில் நடைபெற்ற போட்டிகளில், 44 பதக்கங்களை வென்று குவித்த நம் 39 வீரர்களுக்கு முதலமைச்சர் அவர்களது உத்தரவின் பேரில், 2 கோடியே 52 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகையை வழங்குவதில் இந்த அரசு பெருமை கொள்கிறது.

### ரூ.25 கோடி உயரிய ஊக்கத்தொகை

கடந்த 50 நாட்களில் நடக்கின்ற மூன்றாவது உயரிய ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி இது. சென்ற மாதம், 1,014 வீரர்களுக்கு 25 கோடி ரூபாய் உயரிய ஊக்கத்தொகை வழங்கினோம். சென்ற வாரம், இதே மேடையில் 148 பேருக்கு 4 கோடியே 35 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகையை வழங்கினோம். இன்றைக்கும் அதேபோல் ஒரு சிறப்பான நிகழ்ச்சியில், மாற்றுத்திறனாளிகளான உங்களுக்கு உயரிய ஊக்கத்தொகையை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். மாற்றுத்திறனாளி வீரர்கள் சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றால் மட்டும்தான் அரசு உயரிய ஊக்கத்தொகையை தருகிறது. தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்றால், உயரிய ஊக்கத்தொகையைத் தருவதில்லை. தேசிய அளவிலான போட்டிகளில் வென்றாலும், உயரிய ஊக்கத்தொகை வழங்க வேண்டுமென்று விளையாட்டுத்துறைக்கு, நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு மாற்றுத்திறனாளி வீரர்கள் என்னிடம் கோரிக்கை வைத்தனர்.

### உடனடியாக முதல்வர் உத்தரவு

நான், இந்தப் பிரச்சினையை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்றேன். முதலமைச்சர் அவர்கள் உடனடியாக, `மற்ற வீரர்கள் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றால், எந்த அளவுக்கு உயரிய ஊக்கத்தொகை கொடுக்கிறோமோ, அதேமாதிரி மாற்றுத்திறனாளி வீரர்களுக்கும் இணையாக உயரிய ஊக்கத் தொகை கொடுத்தாக வேண்டும்' என்று உடனடியாக உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில்தான் நம் திராவிட மாடல் அரசு, அதற்கான அரசாணையை உடனே பிறப்பித்தது. இன்றைக்கு இந்திய ஒன்றியத்திலேயே தமிழ்நாட்டில் தான் முதன்முறையாக மாற்றுத்திறனாளி வீரர்களான நீங்கள் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெறும் போதெல்லாம், உங்களுக்கு உடனடியாக உயரிய ஊக்கத்தொகையைக் கொடுத்து வருகிறோம். மற்ற வீரர்களுக்கு இணையாக உங்களுக்கும் உயரிய ஊக்கத்தொகையை நம் அரசு உடனடியாகக் கொடுக்கிறது.

### திராவிட மாடல் அரசு

தமிழ்நாட்டு மாற்றுத்திறனாளி வீரர்கள் இன்றைக்கு ஏராளமான சாதனைகளைத் தொடர்ந்து படைத்து வருகிறீர்கள். இந்த மேடையில்கூட இரண்டு முக்கியமான மாற்றுத்திறனாளி வீரர்கள், உங்கள் முன்பு அமர்ந்திருக்கிறார்கள். மாற்றுத்திறனாளிகள் தடகளப் போட்டிகளில் சர்வதேச அளவில், பதக்கங்களைக் குவித்து வருகின்ற தம்பி மனோஜ் சிங்கராஜ் இங்கு வந்திருக்கிறார்.

நம் நம் விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு, ஊக்குவிக்கும் திட்ட (எம்.ஐ.எம்.எஸ்) வீரர் தம்பி மனோஜ் அவர்களுக்கு நம் திராவிட மாடல் அரசு தொடர்ந்து துணை நின்று வருகிறது.

அவரும் தன் சாதனைகளின் மூலமாக உங்கள் எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியாக இருந்து வருகிறார். தம்பி மனோஜ் இங்கு குறிப்பிட்டதுபோல் 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், தமிழ்நாடு அரசில் வேலைவாய்ப்பைப் பெற்று இருக்கிறார்.

### மணவிழா வாழ்த்து

சமீபத்தில் அவருக்குத் திருமணம் நடந்தது. அந்த திருமண விழாவிற்கு என்னை அழைத்து இருந்தார். அந்த திருமண விழாவில் நான் கலந்துகொண்டு, உங்கள் அத்தனை பேரின் சார்பாக, முதலமைச்சரின் சார்பாக வாழ்த்திவிட்டு வந்தேன். நம் அனைவரின் சார்பாக அவருக்கு வாழ்த்துகள்.




அதேபோல், பாரா டேபிள் டென்னிஸ் வீராங்கனை தங்கை சஹானா ரவி இங்கு வருகை தந்துள்ளார். பெயரைப் பார்க்கும்போது பேபி சஹானா ரவி என்று போட்டிருந்தது. நான்கூட சிறுவயது பெண் என்று நினைத்து வந்தேன். ஆனால், இங்கு அவர் பேசும்போதுதான் தெரிந்தது.

மிகவும் தெளிவாக அவர் பேசினார். உங்களுக்கான இந்தத் தன்னம்பிக்கையை விளையாட்டுதான் கொடுத்து இருக்கிறது. தன் 13-வது வயதிலிருந்து பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் பல சாதனைகளைப் படைத்து வருகிறார் தங்கை சஹானா ரவி அவர்கள்.

### 12 தங்கப் பதக்கங்கள்

2016-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தேசிய மற்றும் சர்வதேச அளவிலான பாரா போட்டிகளில் 35 பதக்கங்களை வென்று, நம் தமிழ்நாட்டிற்கு பெருமை தேடித் தந்துள்ளார். குறிப்பாக, 12 தங்கப் பதக்கங்களை, இதுவரை வென்றுள்ளார்.

இன்டர்நேசனல் டேபிள் டென்னிஸ் பெடரேசன் ட்ரக்கிங்கில் தங்கை சஹானா மாற்றுத்திறனாளிகள் பிரிவில், உலக அளவில் 16-வது இடத்தில் இருக்கிறார். இன்றைக்கு நேஷனல் பாரா டென்னிஸ் போட்டியில் 4 பதக்கங்களை வென்ற அவருக்கு உயரிய ஊக்கத்தொகையாக 20 லட்சம் ரூபாயை நாம் கொடுக்க இருக்கிறோம். அவருக்கும் நமது வாழ்த்துகள்.

4 வருடங்களுக்கு முன்பு விளையாட்டை விட்டு விடலாமா என்று யோசித்தேன்"என்று அவர் சொன்னார். ஆனால், நம் அரசு அவருக்கு தொடர்ந்து உறுதுணையாக இருந்து, இன்றைக்கு ஒரு பெரிய நிலையை அடைந்து இருக்கிறார். அவருக்கு நான் சொல்வதெல்லாம் அந்த யோசனை உங்களுக்கு என்றைக்கும் வர வேண்டாம். என்றென்றைக்கும் உலக அளவில் நடக்கின்ற எந்த போட்டியாக இருந்தாலும் உங்களுக்கு உதவுவதற்கு, உங்களின் பயிற்சியாளர்கள், உங்களின் குடும்பத்தினர்களுக்கு, இந்த அரசு எப்போதுமே உங்களுக்குத் துணையாக இருக்கும். இன்னும் நீங்கள் நிறைய சாதனைகள் படைப்பதற்கு நம் திராவிட மாடல் அரசு உங்களுக்கு துணை நிற்கும்.

### அதுதான் மிகப்பெரிய வெற்றி

தம்பி மனோஜ், தங்கை சஹானா போல இன்னும் ஏராளமான மாற்றுத்திறனாளி வீரர்கள், வீராங்கனைகளை, தமிழ்நாடு அரசு தொடர்ந்து உருவாக்கும் என்பதை இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அத்தனை பேரின் சாதனைகளால், உங்களின் பெற்றோர்கள் எவ்வளவு பெருமை கொள்வார்களோ, உங்களின் நண்பர்கள் எவ்வளவு பெருமை கொள்வார்களோ, அதைவிட அதிகமாக நம் திராவிட மாடல் அரசு பெருமை கொள்கிறது.

நீங்கள் விளையாட்டில் வெற்றி பெறுவது, பதக்கம் வெல்வது எல்லாம் மிகப்பெரிய விஷயம். அதில் எந்தவிதமான இரண்டாவது மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால், அதைவிட மிகப்பெரிய விஷயம் என்னவென்றால், உங்களின் வெற்றி, உங்களைப்போன்ற இன்னும் பல மாற்றுத்திறனாளிகளை விளையாட்டை நோக்கி அழைத்து வருகிறது அல்லவா, அதுதான் இந்த சமூதாயத்திற்கு நீங்கள் கொடுக்கின்ற மிகப்பெரிய வெற்றி.

மற்றவர்களின் வெற்றி, மகிழ்ச்சியை மட்டுமே தரும். ஆனால், உங்களின் வெற்றி சமூதாயத்தில், சமூகத்தில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தையே உருவாக்கும். அப்படி சமூதாயத்தில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்குகின்ற வகையில், பதக்கங்களைக் குவித்து இங்கு இருக்கின்ற உங்கள் அனைவருக்கும் இன்று உயரிய ஊக்கத்தொகையைத் தருகிறோம்.

### சாம்பியன்ஸ் அறக்கட்டளை

நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலமாக இன்றுவரை மட்டும், கிட்டத்தட்ட 41 மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு 4 கோடியே 55 லட்சம் ரூபாய் அளவில் நிதி உதவிகளை வழங்கி இருக்கிறோம்.

இந்த நிதி உதவியைப் பெற்றுச் சென்று, சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டவர்கள், இதுவரை 113 பதக்கங்களை வென்று வந்துள்ளீர்கள். அதுமட்டுமல்லாமல், இந்த 4 வருடங்களில் மட்டும் 153 மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு 19 கோடி ரூபாய் அளவிற்கு நம் அரசு உயரிய ஊக்கத்தொகை வழங்கி இருக்கிறது.

விளையாட்டுத்துறையைத் தேர்ந்தெடுக்கின்ற மாற்றுத்திறனாளிகளின் எதிர்காலத்தை மனதில் வைத்து, உங்களின் அரசு, உங்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்புகளையும் தொடர்ந்து வழங்கி வருகிறது. இதன் மூலம் சமீபத்தில், 5 மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனையர்கள் தமிழ்நாடு அரசு மற்றும் அரசுப் பொது நிறுவனங்களில்வேலையில்சேர்ந்துள்ளார்கள். மேலும், சட்டமன்றத்தில் உங்களுக்காக அறிவிக்கப்பட்ட 6 பாரா ஸ்போர்ட்ஸ் அரங்கமும் இந்த ஜூன் மாதத்திற்குள் திறந்து வைக்கப்பட்டு, உங்களின் பயன்பாட்டிற்கு வரும். நிச்சயம் அது உபயோகமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

நம் திராவிட மாடல் அரசு, இத்துடன் நிற்காது. தொடர்ந்து உங்களுக்காக உழைக்க, மாற்றுத்திறனாளி வீரர் களுக்கான திட்டங்களை, நிதி உதவிகளைத் தொடர்ந்து தந்துகொண்டே இருக்கும். நம் முதலமைச்சர் அவர்கள், உங்களின் தந்தையின் இடத்தில் இருந்து உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவார். அதேபோல் நானும், உங்களின் குடும்பத்தில் ஒருவனாக, உங்கள் உடன் பிறந்த அண்ணனாக இருந்து, உங்களின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் துணை நிற்பேன்.

இங்கு உயரிய ஊக்கத்தொகையைப் பெற்றுள்ள அத்தனை வீரர்களும் அடுத்தடுத்து பல உயரங்களைத் தொட வேண்டும் என்று வாழ்த்தி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேக்நாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத் துணைத் தலைவர் என்.இராமச்சந்திரன், தேசிய அளவிலான மாற்றுத்திறனாளி தடகள வீரர் மனோஜ் சிங்கராஜ், பாரா டேபிள் டென்னிஸ் வீராங்கனை பேபி சஹானா ரவி, செரிபரல் பால்சி அசோசியேசன் தலைவர் உமாராணி மற்றும் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.